ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

43 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :

- ✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பாரம்பரிய புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலின் ஆசிரியராக அறிமுகம் செய்யப்படுபவர்
(1) யோவான் ஆவார். (2) பேதுரு ஆவார். (3) திமோத்தேயு ஆவார்.
(4) யாக்கோபு ஆவார். (5) யூதா ஆவார்.

**2.** கடல் மட்டத்தின் 675 அடி கீழே அமைந்துள்ள இதயத்தின் வடிவம் கொண்டுள்ள கடல்
(1) சாக்கடல் (2) கலிலேயாக் கடல் (3) மத்தியதரைக் கடல்
(4) செங்கடல் (5) கள்ப் கடல்

**3.** தாவீதின் பரம்பரையில் இறுதி அரசன்
(1) யோசியா ஆவார். (2) யோயாக்கின் ஆவார். (3) செதெக்கியா ஆவார்.
(4) சாவுல் ஆவார். (5) சாலமோன் ஆவார்.

**4.** தொடக்க நூலில் முதலாம் அதிகாரம் தொடக்கம் மோசேயின் இறப்பு வரையுள்ள பகுதி உள்ளடங்கும் மரபு
(1) யாவே மரபு ஆகும். (2) யூத மரபு ஆகும். (3) எலொகிம் மரபு ஆகும்.
(4) இணைச்சட்ட மரபு ஆகும். (5) குருக்கள் மரபு ஆகும்.

**5.** படைப்பு பற்றிய முதல் கதையில் 'வானம்' என்னும் சொல்லின் கருத்து
(1) கிரகங்கள் ஆகும். (2) நீர் ஊற்றுக்கள் ஆகும். (3) மண்ணகம் ஆகும்.
(4) விண்ணகம் ஆகும். (5) மலைகள் ஆகும்.

**6.** பாஸ்கா உணவு வழிபாட்டில் இறைகட்டளையை விரைவில் நிறைவேற்றவேண்டுமென்பது அடையாளப்படுத்தப்படுவது
(1) கசப்புக் கீரையை உண்ணுதல் மூலம் ஆகும்.
(2) திராட்சை இரசம் அருந்துதல் மூலம் ஆகும்.
(3) பாஸ்கா செம்மறியை உண்ணுதல் மூலம் ஆகும்.
(4) புளிப்பற்ற அப்பத்தை உண்ணுதல் மூலம் ஆகும்.
(5) காடியைக் குடித்தல் மூலம் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

7. மெசியாவின் ஆட்சியின் வல்லமையையும் அமைதியின் அரசனின் வருகையையும் கொண்டாடுவதற்கு இறைவாக்கினர் செக்கரியாவின் நூலின் 9 ஆம் அதிகாரத்தில் எவ்வாறு அழைப்பு விடுக்கப்படுகிறது?
(1) "ஆண்டவர் நம்முடனே" என்றாகும்.
(2) "இருளில் நடந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்" என்றாகும்.
(3) "எமக்கு ஓர் குழந்தை பிறந்துள்ளது" என்றாகும்.
(4) "ஓநாய் செம்மறியாட்டுடன் வாழும்" என்றாகும்.
(5) "மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூரு" என்றாகும்.

8. இறைவனின் துன்புறும் ஊழியனைப் பற்றிக் குறிப்பிடும் திருவிவிலிய நூல் எது?
(1) ஓசேயா (2) ஆமோஸ் (3) எசாயா
(4) மலாக்கி (5) நாகூம்

9. சீனாய் உடன்படிக்கை தொடர்பாகப் பின்வரும் வெளிப்பாடுகளைக் கருதுக.
A - சீனாய் உடன்படிக்கை இருசாரார் ஒப்பந்தமாகும்.
B - சீனாய் உடன்படிக்கை உயிர் வாழ்வதொன்றாகும்.
C - சீனாய் உடன்படிக்கை ஒருசாரார் ஒப்பந்தமாகும்.
D - சீனாய் உடன்படிக்கை முறிவுபட்டது மக்களின் குற்றத்தினாலாகும்.
E - சீனாய் உடன்படிக்கையின் மூலம் மக்களுடைய பாவங்களுக்கு மன்னிப்புக் கிடைக்கும்.
இவற்றில் சரியான வெளிப்பாடுகளாவன,
(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, D ஆகியன மாத்திரம். (3) B, C ஆகியன மாத்திரம்.
(4) B, D ஆகியன மாத்திரம். (5) B, E ஆகியன மாத்திரம்.

10. 'ஆண்டவர் ஆற்றல் அளிப்பார்' என்னும் பொருள் கொண்ட பெயரை உடைய இறைவாக்கினர் யார்?
(1) எசேக்கியேல் (2) ஓசேயா (3) ஆமோஸ்
(4) எசாயா (5) எரேமியா

11. 'மெசபத்தேமியா ஞானம்' பயன்படுத்தப்பட்டது
(1) அரசசபை ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்காகும்.
(2) உலகத்தின் திட்டத்தை விளக்குவதற்காகும்.
(3) ஆட்சிக்குத் தகுதிபெற்றோரைப் பயிற்றுவிப்பதற்காகும்.
(4) நல்லொழுக்க நிலையை விபரிப்பதற்காகும்.
(5) அரச ஆவணங்களைக் கையாளும் கலை பற்றிக் கற்பிப்பதற்காகும்.

12. ஞானம் முன்வைத்துள்ள இலக்கிய நடைகள் இரண்டு ஆவன
(1) பாடல்கள் மற்றும் கவிதைகள் ஆகும்.
(2) உவமைகள் மற்றும் பாடல்கள் ஆகும்.
(3) உருவகங்கள் மற்றும் கவிதைகள் ஆகும்.
(4) மேலதிக விபரங்கள் மற்றும் உருவக அணிகள் ஆகும்.
(5) பழமொழிகள் மற்றும் மேலதிக விபரங்கள் ஆகும்.

13. கி. மு. 63 இல் பாலஸ்தீன நாட்டினுள் யூத மக்களுக்கு சமய சுதந்திரம் கிடைத்தது யாருடைய ஆட்சியின் கீழ் ஆகும்?
(1) உரோமையர் (2) கிரேக்கர் (3) ஏரொதியர்
(4) பாலஸ்தீனர் (5) சமாரியர்

14. எஸ்சேனியருடைய வாழ்க்கை முறை பற்றிய பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - திருமணம் முடித்தல்
B - உயிர்த்தெழுதல் பற்றிய நம்பிக்கையின்மை
C - வெள்ளை உடை அணிதல்
D - சேர்ந்து உணவருந்துதல்
E - தீய ஆவிகள் பற்றிய நம்பிக்கையின்மை
மேற்கூறிய விடயங்களில் எஸ்சேனியர்களுக்குத் தனித்துவமான விடயங்கள்
(1) A, B ஆகியன மாத்திரம். (2) B, C ஆகியன மாத்திரம். (3) C, D ஆகியன மாத்திரம்.
(4) C, E ஆகியன மாத்திரம். (5) D, E ஆகியன மாத்திரம்.

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



15. திருவிவிலிய பாரம்பரியத்துக்கு அமைய புனித மத்தேயு தமது நற்செய்தியைத் தயாரிப்பதற்கான செல்வாக்கைப் பெற்றுக்கொண்ட ஆக்கம் எது?
(1) ஞான இலக்கியம் (2) திருப்பாடல்கள் (3) இறைவாக்கு நூல்கள்
(4) எரேமியா நூல் (5) ஐந்நூல்கள்

16. இரேனியுஸ் போன்ற திருச்சபைத் தந்தையர்கள் குறிப்பிடுவதன்படி புனித யோவான் நற்செய்திக்கான தகவல்களைப் பெற்றுக்கொண்டது
(1) பெகெஸியுஸ்யிடமிருந்தாகும். (2) பொலிகார்ப்பிடமிருந்தாகும். (3) பபியஸிடமிருந்தாகும்.
(4) ஒரிஜினிடமிருந்தாகும். (5) ஜெரோமிடமிருந்தாகும்.

17. மறை அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதன் படி திருத்தூதர் பணிகள் நூல் எழுதப்பட்டிருப்பது
(1) உரோமையில் ஆகும். (2) கிரேக்கத்தில் ஆகும். (3) பாலஸ்தீனாவில் ஆகும்.
(4) கலிலேயாவில் ஆகும். (5) எருசேலமில் ஆகும்.

18. புனித பவுலின் இரண்டாவது மறைதூதுப் பயணத்தில் கலந்து கொண்டவர் யார்?
(1) பர்னபா (2) யோவான் மாற்கு (3) தீத்து
(4) லூக்கா (5) எரதஸ்

19. பின்வரும் புனித பவுலின் கடிதங்கள் - திருமுகங்களைக் கருதுக.
A - 1 தெசலோனிக்கர்
B - 2 தெசலோனிக்கர்
C - 1 கொரிந்தியர்
D - எபேசியல்
E - கொலோசேயர்
மேற்கூறிய கடிதங்கள் - திருமுகங்களில் புனித பவுல் தம் கைப்பட எழுதியதாக ஏற்றுக்கொள்ளப்படுபவை
(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம். (3) B, C ஆகியன மாத்திரம்.
(4) C, D ஆகியன மாத்திரம். (5) D, E ஆகியன மாத்திரம்.

20. 'மக்காரியோயி' என்னும் கிரேக்கச் சொல்லின் ஓர் கருத்து
(1) சீடர்கள் என்பதாகும். (2) பின்பற்றுவோர் என்பதாகும். (3) தூயவர்கள் என்பதாகும்.
(4) உரையாளர் என்பதாகும். (5) பேறுபெற்றோர் என்பதாகும்.

21. இயேசுவை முழு உலகிற்கும் இறை ஆட்சியை வெளிப்படுத்திய ஓர் ஆசிரியராக அறிமுகப்படுத்தியவர் யார்?
(1) புனித மத்தேயு (2) புனித மாற்கு (3) புனித லூக்கா
(4) புனித யோவான் (5) புனித பர்னபா

22. புனித மத்தேயு நற்செய்தியின் 18 ஆம் அதிகாரத்தில் 'சிறுவர்' என அறிமுகப்படுத்தப்படுபவர்கள் யார்?
(1) சிறுபிள்ளைகள்
(2) வளர்ந்தோர்
(3) இயேசுவைப் பின்பற்றுபவர்கள்
(4) அறிவில் குறைந்த வளர்ந்தோர்
(5) இயேசுவைப் பின்பற்றாதோர்

23. பிலாத்துவின் மனைவியின் கனவு தொடர்பாகக் குறிப்பிடும் நற்செய்தியாளர்
(1) புனித மாற்கு ஆவார். (2) புனித லூக்கா ஆவார். (3) புனித பர்னபா ஆவார்.
(4) புனித யோவான் ஆவார். (5) புனித மத்தேயு ஆவார்.

24. புனித பவுலின் படிப்பினைகளின்படி நம்பிக்கையையும், எதிர்நோக்கையும் அர்த்தமுள்ளதாக்குவது
(1) இரக்கமாகும். (2) அன்பாகும். (3) அனுதாபமாகும்.
(4) பொறுமையாகும். (5) செபமாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**25.** செப்துவாஜிந்த் பிரதியில் இறைவனை 'யாவே' என இடப்பட்டிருந்த எபிரேய பெயரைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்ப்பது

(1) ஆண்டவர் எனவாகும். (2) கிறிஸ்துநாதர் எனவாகும். (3) இயேசு எனவாகும்.
(4) இயேசு கிறிஸ்து எனவாகும். (5) படைத்தவர் எனவாகும்.

**26.** திருமுழுக்குப் பெறத் தம்மிடம் வந்த இயேசுவைத் திருமுழுக்கு யோவான் தடுக்க முயன்றதன் காரணம்

(1) இயேசுவிடம் எந்தப் பாவமும் இன்மையாகும்.
(2) இயேசு தமது உறவினராக இருந்தமையாகும்.
(3) இயேசு மீட்பர் எனத் திருமுழுக்கு யோவான் அறிந்திருந்தமையாகும்.
(4) இயேசுவின் பகிரங்க வாழ்வு இன்னும் ஆரம்பிக்கப்படாதிருந்தமையாகும்.
(5) இயேசு இதுவரை சாத்தானால் சோதிக்கப்படாதிருந்தமையாகும்.

**27.** திருவிவிலியத்தில் அறிஞர்கள் எடுத்துக்காட்டுவதன்படி, திவ்விய நற்கருணை பற்றிய கற்பித்தலில் இயேசு பயன்படுத்திய சொல்

(1) அப்பம் என்பதாகும். (2) பலி என்பதாகும். (3) தசை என்பதாகும்.
(4) மன்னா என்பதாகும். (5) உணவு என்பதாகும்.

**28.** உரோமையில் பல மாகாணங்களை அழிவுக்குட்படுத்தி ஏற்பட்ட தீவைப்பிற்குக் கிறிஸ்தவர்களே பொறுப்புக் கூறவேண்டியவர்களென, அவர்களைக் கடுமையான துன்புறுத்தலுக்குள்ளாக்கியது

(1) முதலாம் கலாபனைக் காலத்திலாகும்.
(2) இரண்டாம் கலாபனைக் காலத்திலாகும்.
(3) மூன்றாம் கலாபனைக் காலத்திலாகும்.
(4) நான்காம் கலாபனைக் காலத்திலாகும்.
(5) ஐந்தாம் கலாபனைக் காலத்திலாகும்.

**29.** முதல் முறையாகக் கிறிஸ்தவ குருக்கள், ஆயர்களைக் கொடூரமாகத் துன்புறுத்த ஆரம்பித்த பேரரசன்

(1) தேசியுஸ் (2) வலேரியன் (3) அவுரேலியன்
(4) மாக்சிமியன் (5) தியோகிளிசியன்

**30.** 'பாவசங்கீர்த்தனம்' (The Confession) மற்றும் 'இறை நகரம்' (The City of God) ஆகிய நூல்களை எழுதித் திருச்சபைக்கு அளித்தவர்

(1) புனித ஜஸ்டின் (2) புனித ஜெரோம் (3) புனித சிறில்
(4) புனித அகுஸ்தினார் (5) புனித அத்தனாசியுஸ்

**31.** திருச்சபை வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்க்கும்போது அவதானிக்கமுடிவது திருச்சபைக்கு எதிராகக் கடுமையான தாக்கங்கள் உருவாகியிருப்பது

(1) யூத சமூகத்தினால் என்பதாகும்.
(2) சதுசேயரால் என்பதாகும்.
(3) பரிசேயரால் என்பதாகும்.
(4) திருச்சபைக்குள்ளேயே என்பதாகும்.
(5) உரோமைப் பேரரசினால் என்பதாகும்.

**32.** கிறிஸ்துவியல் பொதுச்சங்கம் என அறிமுகம் செய்யப்படுவது

(1) லியோன்ஸ் திருச்சங்கம்.
(2) திரிதெந்தீனு திருச்சங்கம்.
(3) இலத்திறன் திருச்சங்கம்.
(4) முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கம்.
(5) கொன்ஸ்தாந்திநோபிள் திருச்சங்கம்.

**33.** முதல் நிசேயா திருச்சங்கத்தின் மூலம் விடை காண்பதற்கு ஏதுவான காரணமாக அமைந்தது

(1) ஆரிய பேதகமாகும். (2) முக்கியமற்ற பேதகமாகும். (3) இயுத்திகே பேதகமாகும்.
(4) பெலாஜியன் பேதகமாகும். (5) நெஸ்தோரிய பேதகமாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**34.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - வண்டல் கோத்திரத்தினர் உரோமைத் தாக்குவதிலிருந்து விலகி நின்றனர்.

B - கி. பி. 476 ஆம் ஆண்டளவில் மேற்குப் பேரரசு முழுவதையும் கோத்திரத்தினர் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தனர்.

C - பெலாஜிய பேதகம் மனித சுபாவம் சென்ம பாவத்தினால் அழிவுற்றது என்ற கொள்கையில் உறுதியாக இருந்தது.

D - ஐந்தாம் நூற்றாண்டு ஆகும்போது பல பேரரசர்கள் கிழக்குத் திருச்சபையின் ஆட்சியாளர்களாகச் செயலாற்றினர்.

E - மூன்றாம் நூற்றாண்டு இறுதியில் பேரரசினால் திருச்சபை துன்புறுத்தல்களுக்கு ஆளாவது முடிவுற்றிருந்தது.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானவை

(1) A, C ஆகியன மாத்திரம். (2) A, E ஆகியன மாத்திரம். (3) B, D ஆகியன மாத்திரம்.
(4) C, E ஆகியன மாத்திரம். (5) D, E ஆகியன மாத்திரம்.

**35.** திருச்சபையில் நிலவிய இறையியலுக்கும், ஆன்மீக புதிய யுகம் ஆகிய திருச்சபைத் தந்தையர்களின் காலத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது

(1) நான்காம் நூற்றாண்டிலாகும். (2) ஐந்தாம் நூற்றாண்டிலாகும். (3) ஆறாம் நூற்றாண்டிலாகும்.
(4) ஏழாம் நூற்றாண்டிலாகும். (5) எட்டாம் நூற்றாண்டிலாகும்.

**36.** கிறிஸ்தவ திருச்சபைக்கும் ஓர்த்தொடொக்ஸ் சபைக்கும் இடையில் ஏற்பட்டிருந்த முரண்பாடுகள் ஓர் ஒருமைப்பாட்டு நிலைக்கு வந்தது

(1) கி. பி. 590 இல் திருத்தந்தை முதலாம் கிரகோரியார் காலத்திலாகும்.
(2) கி. பி. 858 இல் திருத்தந்தை முதலாம் நீக்கிலஸ் காலத்திலாகும்.
(3) கி. பி. 1073 இல் திருத்தந்தை ஏழாம் கிரகோரியார் காலத்திலாகும்.
(4) கி. பி. 1493 இல் திருத்தந்தை ஆறாம் அலெக்சாண்டரின் காலத்திலாகும்.
(5) கி. பி. 1965 இல் திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் காலத்திலாகும்.

**37.** புனித லொயோலா இக்னேசியஸ்சினால் எழுதப்பட்ட நூல் எது?

(1) நிறைவாழ்வின் வழி (The Way of Perfection)
(2) உள்ளக மாளிகை (The Interior Castle)
(3) இருண்ட இரவு (Dark Night of the Soul)
(4) ஆன்மீகப் பயிற்சிகள் (Spiritual Exercises)
(5) ஆன்மீகப் பாடல் (Spiritual Canticle)

**38.** திருத்தந்தை பதினோராம் பத்திநாதரால் வெளியிடப்பட்ட சுற்றுமடல்களில் ஒன்று

(1) பாச்செம் இன் டெரிஸ் (அவனியில் அமைதி)
(2) குவாத்திர ஜெசிமோ அன்னோ (நாற்பது ஆண்டுகள்)
(3) றேரும் நோவாறும் (உழைக்கும் மக்கள்)
(4) போப்புளோறும் புறோகிறாசியோ (மக்கள் முன்னேற்றம்)
(5) மானே நோபிஸ்கும் டோமினே (எங்களோடு தங்கும்)

**39.** கொஸ்மஸ் இன்டிகோ என்னும் உல்லாசப் பயணியின் சான்று இலங்கையருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது

(1) போர்த்துக்கேயர் வருகை பற்றி அதில் குறிப்பிடப்படுவதனாலாகும்.
(2) சங்கிலி அரசனின் துன்புறுத்தல் பற்றி அதில் குறிப்பிடப்படுவதனாலாகும்.
(3) கிறிஸ்தவ மறையைத் தழுவிக் கொண்ட இளவரசன் தர்மபாலன் பற்றி அதில் குறிப்பிடப்படுவதனாலாகும்.
(4) பொலநறுவைக் காலத்தில் வாழ்ந்த கத்தோலிக்கர் பற்றி அதில் குறிப்பிடப்படுவதனாலாகும்.
(5) ஆறாம் நூற்றாண்டில் இலங்கையில் கிறிஸ்தவ பக்தர்கள் வாழ்ந்தமைக்கு சான்றாக இருப்பதனாலாகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**40.** போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த பின்னர் முதல் திருப்பலியை நிறைவேற்றியவர்
(1) அருட்பணி வின்சென்ற் அடிகளாராவார்.
(2) அருட்பணி கொன்சால்வேஸ் அடிகளாராவார்.
(3) அருட்பணி சீமன் டீ கொயம்ப்ரா அடிகளாராவார்.
(4) அருட்பணி அந்தோனியோ பத்ராம் அடிகளாராவார்.
(5) அருட்பணி ஜோன் தவிலா டிகொன்தே அடிகளாராவார்.

**41.** பதினாறாம் நூற்றாண்டில் தென் கிழக்கு இந்தியக் கரையோரத்தில் வாழ்ந்த பரவ குல மற்றும் கரையார் குல மக்கள் கிறிஸ்தவ மதம் பற்றிப் புரிந்துணர்ந்து திருமுழுக்குப் பெற்றதைக் கேள்வியுற்ற மன்னார்த் தீவின் கரையோர மக்கள் தங்களுக்கும் மறையைப் போதிக்க வரும்படி அழைப்பு விடுத்தது
(1) அருட்பணி கொன்சால்வேஸ் அடிகளாருக்காகும்.
(2) அருட்பணி பிரான்சிஸ் சவேரியார் அடிகளாருக்காகும்.
(3) அருட்பணி ஜோசப் வாஸ் அடிகளாருக்காகும்.
(4) அருட்பணி ஜோன் ஸ்ரீபன் அடிகளாருக்காகும்.
(5) அருட்பணி ஜோசப் மேரிபிராவி அடிகளாருக்காகும்.

**42.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - கல்வித்திட்ட ஒழுங்கமைப்புக்கள் விழ்ச்சியடைந்தன.
B - கத்தோலிக்க சமய வழிபாடுகளுக்கு அனுமதி கிடைத்தது.
C - கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு செபங்களைக் கற்றுக்கொடுக்க முடியவில்லை.
D - கிறிஸ்தவர்கள் தமது கழுத்தில் செபமாலையை அணிந்திருந்தனர்.
E - 16 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்த புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவினர்.
F - அஞ்ஞான ஔசதய மற்றும் கத்தோலிக்க ஆலயம் என்னும் நூல்கள் வெளிவந்தன.
மேற்குறித்த கூற்றுகளில் ஒல்லாந்தர் காலத்திற்குரிய கூற்றுகள்
(1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, E, F ஆகியன மாத்திரம். (3) B, C, D ஆகியன மாத்திரம்.
(4) C, D, E ஆகியன மாத்திரம். (5) D, E, F ஆகியன மாத்திரம்.

**43.** ஒல்லாந்தர் இலங்கைக் கத்தோலிக்கரைத் துன்புறுத்தியதற்கான ஓர் காரணமாக அமைந்தது
(1) கிறிஸ்தவ மறை கருமங்களுக்காகத் தேசிய மொழியைப் பயன்படுத்தியமையாகும்.
(2) இலங்கையில் கறுவா ஏகபோகம் கத்தோலிக்கர் மத்தியில் நிலவியமையாகும்.
(3) போர்த்துக்கேயர் கத்தோலிக்க மறையை முன்னிட்டு இந்நாட்டு பௌத்தர்களைத் துன்புறுத்தியமையாகும்.
(4) கண்டி இராச்சியத்தில் வைசூரி நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு கிறிஸ்தவர்கள் உதவியமையாகும்.
(5) கத்தோலிக்கத் திருமறை இந்நாட்டின் கத்தோலிக்கருக்கும் போர்த்துக்கேயருக்குமிடையே நல்ல நட்புறவை ஏற்படுத்துமென நினைத்தமையாகும்.

**44.** 18 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் சமய செயற்பாடுகளை சுதந்திரமாக நடாத்திச் செல்வதற்கு கத்தோலிக்கக் குருக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது
(1) விலியம் கிளட்வின் மூலமாகும்.
(2) அடம் வெஸ்டர் வோல்ட் மூலமாகும்.
(3) தொன் அல்போன்சு பெரேரா மூலமாகும்.
(4) ஸ்கொலகல் ஆணைக்குழு மூலமாகும்.
(5) ஜேம்ஸ் ஸ்ரூவேட் மூலமாகும்.

**45.** திருவிவிலியத்தை சிங்கள மொழியில் மொழிபெயர்க்க வழிகாட்டல் கிடைத்தது
(1) வில்லியம் டொல்ப்பிறியிடமிருந்தாகும்.
(2) பிரான்சிஸ்கோத அல்மேதாவிடருந்தாகும்.
(3) விக்டர் லொபானோவிடமிருந்தாகும்.
(4) கொன்ஸ்தான்தீனுவிடருந்தாகும்.
(5) அருட்பணி ஜோன் தவிலா டீ கொன்தே அடிகளாரிடமிருந்தாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**46.** இலங்கையில் வேற்றுநாட்டு ஆளுனருக்கு எதிராக ஒழுங்கு செய்த அறிக்கையைத் தனது காலணியினுள் மறைத்துக் கொண்டு பிரித்தானியாவிற்குக் கொண்டு சென்றவர்
(1) ஜே. ஏ. எல். குரே
(2) ஸ்ரீமத் ஜேம்ஸ் பீரிஸ்
(3) ஈ. டபிள்யூ. பெரேரா
(4) அல்பட். ஏ. விக்கிரமசிங்க
(5) அருட்பணி கிறிஸ்டோப்பர் பொன்ஜின் அடிகளார்

**47.** சுதந்திரத்தின் பின் இலங்கை கத்தோலிக்க திருச்சபை முகம் கொடுத்த ஓர் பிரச்சினை
(1) மறைபோதித்தல் செயற்பாடுகளைத் தடை செய்தமை
(2) திருப்பலியை இலத்தின் மொழியில் நடாத்த நேர்ந்தமை
(3) கிறிஸ்தவ சமயத்தவர்கள் மீதான இரக்கமற்ற விமர்சனங்களை மேற்கொள்ளல்
(4) சமய செயற்பாடுகள் மற்றும் விழாக்கள் நடாத்துவதில் வரையறைகள் விதிக்கப்பட்டமை
(5) சமய செயற்பாடுகளுக்காக வெளிநாட்டுப் பண உதவிகள் கிடைக்காமை

**48.** கத்தோலிக்க பாடசாலைகளில் மாணவ மாணவியர்களுக்கு சமயக்கல்வி உரிமையற்றுப் போவதற்கும் பல பாடசாலைகளில் கத்தோலிக்க அதிபர்கள் இல்லாமைக்கும் முக்கிய காரணம்,
(1) கிறிஸ்தவ சமய இயக்கங்களிடையே ஏற்பட்ட பிரிவினையாகும்.
(2) 1960 ல் சமயப் பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டமையாகும்.
(3) 1867 ல் முன்வைக்கப்பட்ட உதவி பெறும் பாடசாலை முறையாகும்.
(4) 1970 ம் ஆண்டு இறுதிக்கட்டத்தல் ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பிரச்சினையாகும்.
(5) சில போர்த்துக்கேய படைவீரர்களின் கொடூர செயல்களின் குற்றச்சாட்டு கத்தோலிக்கர் மீது சுமத்தப்பட்டமையாகும்.

**49.** மனிதனுக்கு மட்டுமே உரிய ஓர் கொடை எது?
(1) செவிமடுக்கும் ஆற்றல்
(2) பல பிரதேசங்களிடையே பயணிக்கும் ஆற்றல்
(3) சுதந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றல்
(4) ஓர் குடும்ப வாழ்வை வாழும் ஆற்றல்
(5) தன் இனத்தை இடைவிடாது நிலைத்திருக்கச் செய்யும் ஆற்றல்

**50.** திருச்சபையின் ஓர் அத்தியாவசியப் பண்பு
(1) திருவழிபாடு
(2) அப்போஸ்தலிக்கம்
(3) மரியன்னை பக்தி
(4) கோயில் திருவிழாக்கள்
(5) திவ்விய நற்கருணைத் திருவிழா

* * *

Past Papers Wiki



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

**43 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) திருவிவிலியத்தின் கிரேக்க பிரதியையும், இலத்தின் பிரதியையும் அழைக்கும் பெயர்களை வெவ்வேறாக எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) சாக்கடலின் இயற்கை அமைப்பு பற்றி **இரு** விடயங்கள் எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) 'தியோ', 'னெட்மா', 'தியோப்னெட்டோஸ்' என்னும் கிரேக்க சொற்கள் **மூன்றினதும்** கருத்துக்களை எழுதுக. (06 புள்ளிகள்)

(iv) திருவிவிலியத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இளம் பராயத்தினரான உமது வாழ்வை வெற்றிகரமாக்கிக் கொள்ளக்கூடிய வழிகள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) விடுதலைப் பயண நூலில் குறிப்பிடப்படும் 10 பெரும் துன்பங்களில் 9 ம், 10 ம் பெரும் துன்பங்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) 'மாசா', 'மெரியா' என்னும் எபிரேய சொற்களின் கருத்துக்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) பெரிய இறைவாக்கினர் **மூவரினதும்** பெயர்களைத் தருக. (06 புள்ளிகள்)

(iv) நாளைய உலகிற்கு அடியெடுத்து வைக்கும் நீர் இறைவாக்கினரின் முன்மாதிரிகைகளை எவ்வாறு பின்பற்றி செயற்படுவீர் என்பதை **நான்கு** விடயங்களில் விளக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) திருத்தொண்டரான பிலிப் இறை அரசின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) இயேசுவில் நம்பிக்கை கொண்ட புற இனத்தார் தொடர்பாக எருசலேம் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பெந்தகோஸ்தே நாளில் தூய ஆவியின் வருகையின் பின்பு புனித பேதுரு ஆற்றிய அருளுரையில் அடங்கும் **மூன்று** விடயங்களை எழுதுக. (06 புள்ளிகள்)

(iv) புனித பேதுருவின் தலைமைத்துவப் பண்புகளின் மூலம் நிகழ்கால சமூகத் தலைவர்கள் கற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** (i) சமநோக்கு நற்செய்திகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிட்டு, சமநோக்கு நற்செய்திக்கும், புனித யோவான் நற்செய்திக்கும் இடையேள்ள ஒற்றுமைகள் **நான்கினை** விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இயேசுவின் வாழ்க்கை முன்மாதிரிகையைப் பின்பற்றி நற்செய்தியைப் போதிக்கும் ஒருவரிடத்தில் இருக்கவேண்டிய பண்புகள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) எருசேலம் பொதுச் சங்கம் நடந்தேறிய ஒழுங்குமுறையை **ஐந்து** விடயங்களில் விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) புனித பவுலின் வாழ்க்கையிலிருந்து ஓர் கிறிஸ்தவன் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) புனித பவுல் இயேசுவின் தாழ்மை பற்றி பிலிப்பியர் சமூகத்திற்கு முன்வைத்த படிப்பினைகள் **ஐந்தினை** சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) தாழ்மை என்னும் பண்பை சவால்கள் நிறைந்த இன்றைய சமுதாயத்தில் உம்மால் செயற்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) அலெக்சாந்திரியாவின் புனித அத்தனாசிரியாரின் வாழ்க்கை பற்றி சுருக்கமாக அறிமுகப்படுத்தி, அவர் கத்தோலிக்கத் திருச்சபைக்கு அளித்த பங்களிப்பு பற்றி **மூன்று** விடயங்களில் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இறை அரசின் வளர்ச்சிக்காக உமது பிரதேசத்தில் வாழும் முதியோர்களின் நலன் கருதி நீர் வழங்கும் பங்களிப்புகள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) பிரித்தானியர் காலத்தில் இலங்கையின் கல்வி முறை பற்றி **ஐந்து** விடயங்களில் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) புனித யோசப்வாஸ் அடிகளார் இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, அவற்றை முன்மாதிரிகையாகக் கொண்டு இலங்கைத் திருச்சபைக்காக உம்மால் செய்யக்கூடிய செயல்கள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

***


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

LOL Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

## ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L SHORT NOTES, MODEL, REVISION BOOKS & PAST PAPERS IN SINHALA, ENGLISH & TAMIL MEDIUM
LOL BOOK STORE
CASH ON DELIVERY AND KOKO PAYMENT AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls WITH LOL BOOK STORE!